# A STUDY ON SOCIAL HARMONY BASED ON BUDDHIST AND MUSLIM RELATIONSHIP IN SRI LANKA

சமூக நல்லிணக்கம் : இலங்கை பௌத்த – முஸ்லிம் உறவுகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

J. Fathima Minsara

Asst. Lecturer – Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka

fathimaminsara@gmail.com

## ஆய்வின் அறிமுகம் (Introduction):

பல்லின சமூகத்தில் வாழ்கின்ற ஒரு மனிதன் சமூகத்தோடு முரண்பாடுகள் இன்றி இனக்கப்பாட்டோடு ஒற்றுமையாக வாழப்பழகிக் கொள்ளும் நிலையே சமூக நல்லிணக்கம் எனலாம். சமூக நல்லிணக்கம் எனும் எண்ணக்கருவானது இன்று உலக ஒழுங்கில் வலம் வருவது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் இலங்கையில் வாழும் மக்கள் பல்லின சமூத்தில் வாழ்கின்றவரகளாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் அவர்களுக்கிடையே இனப்பிரச்சினை மற்றும் முரண்பாடுகள் தலை தூக்கியுள்ளதனை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவ்வகையில் எமது நாட்டில் சகல பாகங்களிலும் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு பௌத்த – முஸ்லிம் உறவுகளை அடிப்படையாகக் கொண்ட இவ்வாய்வு முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது எனலாம். இவ்வாறு புராதன காலத்திலிருந்து முரண்படுகள் மற்றும் நல்லுறவுகள் ஏற்பட்டு வருகின்றது. இத்தகைய முரண்பாடுகள் மற்றும் நல்லுறவுகள் ஏற்படாவிடின் மனிதன் மனிதனாகவே வாழ்ந்திருக்க முடியாது.

இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம்கள் பல கலாசார பண்பாடுகளுக்கு மத்தியில் வாழ்கின்ற அதேவேளை பௌத்த இன மக்கள் மத்தியில் சிறுபான்மை இனமாக வாழ்கின்ற சூழலில் பௌத்த – முஸ்லிம் உறவு நிலைகள் பற்றிய விடயங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவ்வாறான உறவு நிலைகள் சமூகத்தின் மத்தியில் பல்வேறு சாதக, பாதக விளைவுகளை ஏற்படுத்தி விடுவதனைக் காணலாம். இதற்கு பல்வேறு குழுக்களும் இயக்கங்களும், ஊடகங்களும் தாக்கம் செலுத்துவதனையும் காணலாம்.

இவ்வகையில் பௌத்த – முஸ்லிம் உறவுகள் ஆரோக்கியமானதாகவும் சில சந்தர்ப்பங்களில் ஆரோக்கியமற்றதாகவும் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

## ஆய்வின் நோக்கங்கள் (Purpose of study):

- இலங்கை பௌத்த – முஸ்லிம் மக்களிடையே இன முரண்பாடுகள் ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டறிவதும் சமூக நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பி, ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதற்கான பரிந்துரைகளை வழங்குவதும் இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.
- சமூக நல்லிணக்கத்தின் அவசியத்தை வலியுறுத்தல்.
- பௌத்த, இஸ்லாமிய சமயங்களில் காணப்படும் சமூக நல்லிணக்கம் தொடர்பான அம்சங்களை வெளிக்கொண்டு வருதல்.

## ஆய்வு முறை (Methodology):

வரலாற்று, சமூகவியல், இனத்துவ, பண்புசார் ஒப்பீட்டு ஆய்வு முறைகள் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. சில தகவல்கள் Excel மூலம் பகுப்பாய்வு செய்யப்படவுள்ளன.

இவ்வாய்வு இலங்கையை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மாவட்ட செயலகங்களிலுள்ள சனத்தொகை விகிதாசாரத்துக்கு ஏற்ப எளிய எழுமாற்று மாதிரியைக் (Simple random sampling) கொண்டு 2500 வினாக்கொத்துகள் பயன்படுத்தப்படவுள்ளன.

முதலாம் நிலைத் தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளும் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

- முதலாம் நிலைத் தரவுகளாக: இலங்கையில் சில பிரதேசங்களில் வாழும் முதியோர், ஆசிரியர்கள், வியாபாரிகள். விவசாயிகள், அரச ஊழியர்கள் போன்றோரிடம் பெறப்பட்ட நேர்காணல்கள், கிராம சேவகர்கள், மாவட்ட அலுவலகம், பள்ளிவாயல், பௌத்த விகாரைகள் போன்றவற்றின் பதிவுத் திரட்டுப் புத்தகங்கள், அடகஸ்தலங்கள், கல்வெட்டுகள், சனத்தெகைப் புள்ளிவிபரங்கள், வினாக்கொத்து என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.
- இரண்டாம் நிலைத் தரவுகளாக: இவ்வாய்வு தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், சமய நூல்கள், அறிக்கைகள், நாட்டார் கதைகள், பாடல்கள் இணையத் தள கட்டுரைகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறான பல தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை பௌத்த – முஸ்லிம் உறவுகள் தொடர்பான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி இவ்வாய்வு அமையப்பெறவுள்ளது.

## இலக்கிய மீளாய்வு (Literature review):

எம். எஸ். எம். அனஸ், வீ. அமீர்தீன், ஏ. ஜே. எல். வஸீல் ஆகியோரால் ஆய்வு செய்யப்பட்ட இலங்கையில் இனக்கலவரங்களும் முஸ்லிம்களும் சிங்கள – முஸ்லிம், தமிழ் - முஸ்லிம் இன வன்முறைகளும் இன உறவுப் பிரச்சினைகளும் 1915 முதல் 2002 வரை – ஓர் ஆய்வு என்ற ஆய்வில் இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரங்களும் அதனோடு தொடர்பான பிரச்சினைகளுட் ஆராயப்பட்டுள்ளன. அத்துடன் இந்நூல் சமூக நல்லிணக்கம்: இலங்கை பௌத்த – முஸ்லிம் உறவுகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு என்ற ஆய்வினைத் தொடர்வதற்கு துணை புரிவதாக உள்ளது.

பல்வகையினைக் கையாளுதல் இலங்கையின் சமாதானமும் முரண்பாடும் பற்றிய சொல்லாடல் எனும் ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய தொகுப்பில் ஜோர்ஜ் ப்ரெக்ஸ், பார்ட்க்ளெம் என்போர் எழுதிய இலங்கையில் சமாதானமும் பிணக்கும் பற்றிய கருத்தாடல்கள் எனும் கட்டுரையில் இலங்கையில் சமாதானமும் முரண்பாடுகள் தொடர்பான விடயங்கள் மற்றும் வன்முறை, சிங்களவர்களுடைய மனக்குறை தொடர்பான விடயங்களும் பயங்ரவாதம், முஸ்லிம்களுடைய கருத்தாடல்கள் போன்ற விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. மேலும், இதே நூலில் மன்சூர் மொகமட் பாஸில் என்பவரால் எழுதப்பட்ட இலங்கையின் இனத்துவ பிணக்கில் இலங்கை முஸ்லிம்களுடைய சனத்தொகை, அவர்களுடைய வரலாற்றுப் பின்னணி, போர்த்துக்கேய, ஒல்லாந்த, பிரித்தானியர் காலங்களில் முஸ்லிம்களின் நிலை மற்றும் சுதந்திரத்துக்குப் பின்னர் முஸ்லிம்களுடைய நிலை, முஸ்லிம் பிரச்சினைகளை சர்வதேசியமயமாக்கல் தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் இந்நூலானது இவ்வாய்வோடு தொடர்பான அனைத்து ஆய்வுகளுக்கும் வழிகாட்டுவதாக அமைவதனால் இவ்ாய்வுக்கும் உதவிபுரிவதாய் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மு.அப்துல் கறீம் (1996) என்பவரால் எழுதப்பட்ட இஸ்லாமும் சமய நல்லிணக்கமும் எனும் நூலில் இஸ்லாம் முன்வைக்கும் மனித குல ஒருமைப்பாடு மற்றும் சமய நல்லிணக்கம் போன்ற அம்சங்கள் ஆராயப்பட்டுள்ளன. இதனால் சமூக நல்லிணக்கம் சம்பந்தப்பட்ட விடயங்களை அறிந்து கொள்வதற்குத் துணை புரிவதனூடாக இலங்கை பௌத்த –

முஸ்லிம் உறவு நிலைகளைப் பேணுவதற்கும் ஊக்கமளிப்பதாய் அமைந்துள்ளது. இவ்வகையில் இவ்வாய்வோடு தொடர்புபட்ட நூலாக இந்நூல் காணப்படுகின்றது.

எஸ். எச். ஆதம்பாவா (2003) என்பவரால் மேற்கொள்ளப்பட்ட இஸ்லாம் - சமாதானமும் மனித நேயமும் எனும் ஆய்வில் இஸ்லாத்தில் நிற, மொழி பேதங்களுக்கு இடமில்லை, மனித நேயம், நடுநிலை சமுதாயம் மற்றும் பிற சமயத்தவர்களுடன் எவ்வாறு இணக்கமாக நடந்து கொள்வது போன்ற விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. நாம் வாழும் சூழலில் பிறமதத்தவர்களுடன் எவ்வாறு இணக்கமாக வாழலாம் என்பதனை அறிந்து கொண்டு செயற்படுவதற்கு இந்நூல் துணை புரிவதானால் இவ்வாய்வோடு தொடர்புபட்டு செல்கின்றது.

இமய வரம்பன் (1988) என்பவரால் எழுதப்பட்ட இன ஒடுக்கலும் விடுதலைப் போராட்டமும் என்ற ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய தொகுப்பில் இன உணர்வு, இனவாதம், இன வெறி, சமாதானமும் ஒப்பந்தமும் போன்ற விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. இலங்கை பௌத்த – முஸ்லிம் உறவு நிலைகளை ஆய்வு செய்வதற்கு இவ்விடயங்கள் பெரிதும் துணை புரிகின்றன.

எச். எல். எம். ஹாரிஸ் (2013) என்பவரால் எழுதப்பட்ட சக வாழ்வு சாத்தியப்படுவதற்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் என்ற நூலில் மனித சகோதரத்துவம் பேணப்படல், சக வாழ்வு, பேதமின்மை போன்ற விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. இந்நூலானது இவ்வாய்வினைத் திறம்படச் செய்வதற்கு சில வழிகாட்டல்களை வழங்குகின்றது.

க. சண்முகலிங்கம் (2011) என்பவரால் எழுதப்பட்ட இலங்கையின் இனவரையியலும் மானிடவியலும் என்ற ஆய்வில் சிங்கள சமூகம் பற்றிய விடயங்கள் விளக்கப்பட்டுள்ளது. இவ்விடயங்கள் இவ்வாய்வில் பௌத்த சமூகம் பற்றிய விடயங்களைத் தெளிவுருத்த ஓரளவு உறுதுணையாய் அமையும். ஆனால், இலங்கை பௌத்த சமூகம் பற்றிய முழுமையான விடயங்கள் இடம்பெறவில்லை.

ஏ. எம். நஜிமுத்தீன் (1998) என்பவரால் கண்டி இராச்சிய முஸ்லிம்களின் சிங்கள வம்சாவளிப் பெயர்கள் என்ற நூலில் கண்டி இராச்சியத்திற்குட்பட்ட முஸ்லிம்களின் சிங்கள வம்சாவளிப் பெயர்கள் தொடர்பாக விளக்கப்பட்டுள்ளது. இவ்ாய்வில் இலங்கை பௌத்த – முஸ்லிம் பற்றிய முழுமையான விளக்கங்கள் அமையப்பெறவில்லை. இவ்வகையில் இவ்வாய்வானது வேறுபடுகின்றது.

முகம்மது சமீம் (1997) என்பவரினால் எழுதப்பட்ட ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள் என்ற நூலில் கண்டி இராச்சியத்தின் கீழ் இருந்த முஸ்லிம்களின் நிலை சிங்கள சமுதாய அமைப்போடு ஒன்றிணைந்த முஸ்லிம்களின் நிலை போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்நூல் குறிப்பாக இலங்கையிலுள்ள சிறுபான்மை சமூகத்தை பற்றியே பேசுகிறது. இதனால் இவ்வாய்வோடு தொடர்புபட்டு காணப்படுகின்றது.

ஸீ. எம். ஏ. அமீன் (2012) என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஹிந்து மதம் பௌத்தம் இஸ்லாம் ஓர் ஒப்பீட்டாய்வு என்ற ஆய்வில் பொளத்த சிந்தனைகள், மரபுகள், சாதி பாகுபாட்டு முறைகள், சமயத் தத்துவங்கள், கொள்கைகள் போன்றன விளக்கப்பட்டுள்ளன. இவ்விடயங்கள் பொளத்த சமயத்திலுள்ள சிந்தனைகள், கொள்கைகளை அறிந்து கொள்ள துணை புரிவதுடன் இவ்வாய்வுக்குத் துணைபுரிவதாயும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வல்பொல சிறி இராகுலர் (1989) என்பவரால் எழுதப்பட்ட புத்த பகவான் அருளிய போதனை எனும் நூலில் மனித குலத்துக்குத் தேவையான நற்சிந்தனைகள், சகிப்புத் தன்மை, சகவாழ்வு, ஒழுக்க நெறிகள் போன்ற பல அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்விடயங்கள் இவ்வாய்வுக்கு உறுதுணையாய் அமைவதில் ஐயமில்லை.

றவூப் ஸெய்ன் (2006) எழுதிய சிங்கள – முஸ்லிம் இனமோதல்கள் ஒரு சமூக அரசியற் பார்வை என்ற நூலில் சிங்கள முஸ்லிம் இன முரண்பாடுகள் தொடர்பான பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்விடயங்கள் இவ்வாய்வில் உள்ளடங்கப்பட்டுள்ள பௌத்த – முஸ்லிம் உறவு நிலைக்குத் தடையான அம்சங்களைத் தெளிவுபடுத்த பெரிதும் துணை புரியும்.

ஜி. நடேசன் (2000) என்பவரால் எழுதப்பட்ட இலங்கையில் இன முரண்பாடுகளின் வரலாறு என்ற நூலில் இலங்கையில் இன முரண்பாடுகளின் தோற்றம், வளர்ச்சி, அதன் வரலாறு தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை இவ்வாய்வோடு தொடர்புடையனவாக விளங்குகின்றன.

எம். எம். எம். நூறுல் ஹக் (1998) என்பவரினால் எழுதப்பட்ட தீவும் தீர்வுகளும் என்ற நூலில் முஸ்லிம்களுக்கெதிரான சினமூட்டல்கள், இலங்கை மக்களின் இனவாதப் போக்கும் தீர்வுகளும் மற்றும் பேரினவாத சக்திக்கு மத்தியில் முஸ்லிம்களின் நிலைப்பாடு தொடர்பாக விளக்கப்பட்டுள்ளது.

றசாக் முஹம்மட் அலி (2005) என்பவரால் ஆய்வு செய்யப்பட்ட இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வும் முஸ்லிம்களும் என்ற ஆய்வில் சிறுபான்மையினர் உட்பூசல் விவகாரங்கள், முஸ்லிம்களும் அவர்களுடைய நிர்க்கதி நிலைகளும், இனப்பிரச்சினை மற்றும் சமாதானத்தின் முக்கியத்துவம் போன்ற விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. அத்துடன் இவ்வாய்வுக்கு உறுதுணையாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்கூறப்பட்ட ஆய்வுகள் இவ்வாய்வுக்குத் துணை புரியும் ஆய்வுகளாக அமைந்த போதிலும் இவ்வாய்வுத் தலைப்பு தொடர்பாக இதுவரை தனியானதும் விரிவானதுமான ஆய்வுகள் எவையும் இடம் பெறவில்லை. அந்தவகையில் இவ்வாய்வு முக்கியம் பெறுகின்றது.

## கலந்துரையாடல்களும் அடைவுகளும் (Discussion / Findings):

இவ்வாய்வு இலங்கையில் இலங்கையிலுள்ள முஸ்லிம்களை எழுமாறாகக் கொண்டு தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. ஒரு மாவட்டத்திற்கு 50 வினாக் கொத்துகள் வீதம் 25 மாவட்டத்திற்கும் 1250 வினாக் கொத்துகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சில தகவல்கள் Excel மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் 25 மாவட்டங்களுக்கும் எழுமாறாக வழங்கப்பட்ட 1250 வினாக்கொத்துகளின் படி (வினா: 02 – வினா: 10) வரையான விபரங்கள் பின்வருமாறு:

**வினா:04**

**இலங்கையில் சிங்களமொழி மூலம் கல்வி கற்ற முஸ்லிம்களின் எண்ணிக்கை**

| மாவட்டங்கள் | எண்ணிக்கை | மாவட்டங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| அம்பாறை | - | கிளிநொச்சி | - |
| அநுராதபுரம் | 07 | குருநாகல் | 22 |
| பதுளை | 03 | மன்னார் | - |
| மட்டக்களப்பு | - | மாத்தளை | 29 |
| காலி | 20 | மாத்தறை | 24 |
| கம்பஹா | 18 | மொனராகலை | 13 |
| அம்பாந்தோட்டை | 26 | முல்லைத்தீவு | - |
| யாழ்ப்பாணம் | - | நுவரெலியா | - |

| | | | |
|---|---|---|---|
| களுத்துறை | 28 | பொலன்னறுவை | 27 |
| கண்டி | 30 | புத்தளம் | - |
| கேகாலை | 25 | இரத்தினபுரி | 10 |
| திருகோணமலை | - | கொழும்பு | 37 |
| வவுனியா | - | | |

அட்டவணை - 01

**வினா: 05**

**இலங்கையில் சிங்களமொழி தெரிந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை**

| மாவட்டங்கள் | எண்ணிக்கை | மாவட்டங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| அம்பாறை | 06 | கிளிநொச்சி | 03 |
| அநுராதபுரம் | 100 | குருநாகல் | 94 |
| பதுளை | 88 | மன்னார் | 02 |
| மட்டக்களப்பு | 02 | மாத்தளை | 100 |
| குாலி | 98 | மாத்தறை | 93 |
| கம்பஹா | 93 | மொனராகலை | 94 |
| அம்பாந்தோட்டை | 97 | முல்லைத்தீவு | 03 |
| யாழ்ப்பாணம் | 05 | நுவரெலியா | 89 |
| களுத்துறை | 100 | பொலன்னறுவை | 99 |
| கண்டி | 96 | புத்தளம் | 26 |
| கேகாலை | 98 | இரத்தினபுரி | 97 |
| திருகோணமலை | 07 | கொழும்பு | 100 |
| வவுனியா | 06 | | |

அட்டவணை - 02

**வினா:06**

**இலங்கையில் சிங்கள மொழி பேசக்கூடிய முஸ்லிம்களின் எண்ணிக்கை**

| மாவட்டங்கள் | சரளமாகப் பேசக்கூடியோர் | ஓரளவு பேசக்கூடியோர் | பேசத் தெரியாதோர் | மாவட்டங்கள் | சரளமாகப் பேசக்கூடியோர் | ஓரளவு பேசக்கூடியோர் | பேசத் தெரியாதோர் |
|---|---|---|---|---|---|---|---|
| அம்பாறை | - | 06 | 94 | கிளிநொச்சி | - | 03 | 97 |
| அநுராதபுரம் | 84 | 16 | - | குருநாகல் | 89 | 05 | 06 |
| பதுளை | 72 | 16 | 12 | மன்னார் | - | 02 | 98 |
| மட்டக்களப்பு | - | 02 | 98 | மாத்தளை | 88 | 12 | - |
| காலி | 84 | 14 | 02 | மாத்தறை | 86 | 07 | 07 |
| கம்பஹா | 82 | 11 | 07 | மொனராகலை | 92 | 02 | 06 |
| அம்பாந்தோட்டை | 90 | 07 | 03 | முல்லைத்தீவு | - | 03 | 97 |
| யாழ்ப்பாணம் | - | 05 | 95 | நுவரெலியா | 60 | 29 | 11 |
| களுத்துறை | 94 | 06 | - | பொலன்னறுவை | 92 | 08 | - |
| கண்டி | 90 | 06 | 4 | புத்தளம் | 04 | 22 | 74 |
| கேகாலை | 92 | 06 | 02 | இரத்தினபுரி | 93 | 04 | 03 |
| திருகோணமலை | - | 07 | 9 | கொழும்பு | 93 | 07 | - |
| வவுனியா | - | 06 | 94 | | | | |

அட்டவணை - 03

**வினா:7**

**இலங்கையில் சிங்களம் எழுதத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை**

| மாவட்டங்கள் | நன்றாக எழுதத் தெரிந் | ஓரளவு எழுதத் தெரிந் | எழுதத் தெரியாதோர் | மாவட்டங்கள் | நன்றாக எழுதத் தெரிந்தோர் | ஓரளவு எழுதத் தெரிந்தோர் | எழுதத் தெரியாதோர் |
|---|---|---|---|---|---|---|---|
| அம்பாறை | - | 04 | 96 | கிளிநொச்சி | - | 03 | 97 |
| அநுராதபுரம் | 60 | 30 | 10 | குருநாகல் | 75 | 19 | 06 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பதுளை | 68 | 20 | 12 | மன்னார் | - | 02 | 98 |
| மட்டக்களப்பு | - | 02 | 98 | மாத்தளை | 79 | 21 | - |
| காலி | 82 | 16 | 02 | மாத்தறை | 72 | 21 | 07 |
| கம்பஹா | 78 | 15 | 07 | மொனராகலை | 86 | 08 | 06 |
| அம்பாந்தோட்டை | 80 | 17 | 03 | முல்லைத்தீவு | - | 04 | 96 |
| யாழ்ப்பாணம் | - | 02 | 98 | நுவரெலியா | 21 | 68 | 11 |
| களுத்துறை | 89 | 11 | - | பொலன்னறுவை | 88 | 11 | 01 |
| கண்டி | 76 | 20 | 04 | புத்தளம் | 01 | 25 | 74 |
| கேகாலை | 84 | 14 | 02 | இரத்தினபுரி | 81 | 16 | 03 |
| திருகோணமலை | - | 01 | 99 | கொழும்பு | 89 | 11 | - |
| வவுனியா | - | 02 | 98 | | | | |

அட்டவணை - 04

**வினா:08**

**இலங்கையில் சிறுவர்கள் கல்வியில் பின்தங்கிக் காணப்படுவதற்கான காரணங்கள்**

| **மாவட்டங்கள்** | **வளப்பற்றாக் குறை** | **மொழிகளின் கலப்பு** | **கல்வி பற்றிய விழிப்புணர்வு போதாமை** | **தாய் மொழியில் கல்வி கற்காமை** | **சிறுவர் உரிமை மீறல்கள்** |
|---|---|---|---|---|---|
| அம்பாறை | - | 20 | 03 | 74 | 03 |
| அநுராதபுரம் | 03 | 84 | 02 | 10 | 01 |
| பதுளை | 04 | 60 | 01 | 32 | 03 |
| மட்டக்களப்பு | 06 | 21 | 04 | 66 | 03 |
| காலி | 02 | 84 | 02 | 10 | 03 |
| கம்பஹா | 08 | 17 | 03 | 70 | 02 |
| அம்பாந்தோட்டை | 03 | 62 | 02 | 31 | 02 |
| யாழ்ப்பாணம் | 24 | 10 | 12 | 26 | 28 |
| களுத்துறை | 04 | 54 | - | 42 | - |
| கண்டி | 03 | 41 | - | 56 | - |
| கேகாலை | 10 | 40 | 02 | 45 | 03 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கிளிநொச்சி | - | - | - | - | - |
| குருநாகல் | 08 | 40 | 01 | 50 | - |
| மன்னார் | 26 | 60 | 04 | 06 | 04 |
| மாத்தளை | 06 | 44 | - | 50 | - |
| மாத்தறை | 12 | 36 | - | 52 | - |
| மொனராகலை | 02 | 68 | - | 30 | - |
| முல்லைத்தீவு | - | - | - | - | - |
| நுவரெலியா | 02 | 70 | 02 | 20 | 02 |
| பொலன்னறுவை | 04 | 30 | 04 | 60 | 02 |
| புத்தளம் | 26 | 32 | 04 | 30 | 08 |
| இரத்தினபுரி | - | 60 | - | 40 | - |
| திருகோணமலை | 20 | 45 | 05 | 25 | 05 |
| வவுனியா | 15 | 60 | 05 | 10 | 10 |
| கொழும்பு | - | 36 | - | 62 | 02 |

அட்டவணை - 05

**வினா: 09**

**இலங்கையில் சிங்களப் பிரதேசங்களுக்கு அண்மையில் வசிக்கும் முஸ்லிம்களின் எண்ணிக்கை**

| மாவட்டங்கள் | எண்ணிக்கை | மாவட்டங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| அம்பாறை | - | கிளிநொச்சி | - |
| அநுராதபுரம் | 42 | குருநாகல் | 21 |
| பதுளை | 30 | மன்னார் | - |
| மட்டக்களப்பு | - | மாத்தளை | 37 |
| காலி | 45 | மாத்தறை | 42 |
| கம்பஹா | 21 | மொனராகலை | 28 |
| அம்பாந்தோட்டை | 27 | முல்லைத்தீவு | - |
| யாழ்ப்பாணம் | - | நுவரெலியா | - |
| களுத்துறை | 36 | பொலன்னறுவை | 30 |

| | | | |
|---|---|---|---|
| கண்டி | 46 | புத்தளம் | - |
| கேகாலை | 29 | இரத்தினபுரி | 38 |
| திருகோணமலை | - | கொழும்பு | 62 |
| வவுனியா | - | | |

அட்டவணை - 06

**வினா:10**

**இலங்கையில் சிங்களவர்களை அயலவர்களாகக் கொண்ட முஸ்லிம்களின் எண்ணிக்கை**

| **மாவட்டங்கள்** | **எண்ணிக்கை** | **மாவட்டங்கள்** | **எண்ணிக்கை** |
|---|---|---|---|
| அம்பாறை | - | கிளிநொச்சி | - |
| அநுராதபுரம் | 38 | குருநாகல் | 09 |
| பதுளை | 12 | மன்னார் | - |
| மட்டக்களப்பு | - | மாத்தளை | 21 |
| காலி | 86 | மாத்தறை | 38 |
| கம்பஹா | 04 | மொனராகலை | 24 |
| அம்பாந்தோட்டை | 22 | முல்லைத்தீவு | - |
| யாழ்ப்பாணம் | - | நுவரெலியா | - |
| களுத்துறை | 20 | பொலன்னறுவை | 26 |
| கண்டி | 22 | புத்தளம் | - |
| கேகாலை | 11 | இரத்தினபுரி | 32 |
| திருகோணமலை | - | கொழும்பு | 56 |
| வவுனியா | - | | |

அத்துடன், இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் வாழும் பௌத்த முஸ்லிம் மக்களின் உறவு நிலைகள் 68% அதிகமாகவும் 20% ஓரளவாகவும் 10% குறைவாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும், இலங்கை வாழ் பௌத்த முஸ்லிம்களுடைய உறவு நிலைகள் பெரும்பாலும் தொழில் ரீதியான விடயங்கள், கல்வி, அரசியல் மற்றும் வேறு பல விடயங்கள் போன்றவற்றினூடாக இடம் பெறுவது சுட்டிக்காட்டத்தக்கது. அந்தவகையில் ஆய்வு செய்யப்பட்டதற்கு இணங்க இலங்கை வாழ் பௌத்த முஸ்லிம் உறவு நிலைகளில் தொழில் ரீதியாக இடம் பெறும் உறவு நிலைகள் 35% ஆகக் காணப்படுகின்றது. அவற்றில் வர்த்தகம் 5%, விவசாய ரீதியாக 10%, அரச உத்தியோக ரீதியாக 10%. கைத்தொழில் ரீதியாக 1%, வெளிநாட்டு வேலைவாய்ப்பு ரீதியாக 4%, திருமண ரீதியாக 8%, மருத்துவ ரீதியாக 15%, வேறு காரணங்கள் மூலமாக 2% உம் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இலங்கையில் பல்லின சூழலில் வாழும் பௌத்த – முஸ்லிம்களுக்கிடையிலான முரண்பாடுகள் 72% ஆனவையாக உள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. இவற்றில் சமய ரீதியான காரணங்கள் 25%, தொழில் சமய ரீதியான காரணங்கள் 10%, கல்வி சமய ரீதியான காரணங்கள் 5%, அரசியல் சமய ரீதியான காரணங்கள் 30%, வேறு காரணங்கள் 2% உம் காணப்படுகின்றது எனலாம்.

எனவே இவ்வாய்வு இலங்கை பௌத்த – முஸ்லிம்களின் வரலாறு, சமூக நல்லிணக்கத்தைப் பேணுவதில் பௌத்த – முஸ்லிம்களுடைய நிலைப்பாடு போன்றனவும் சமய, சமூக, அரசியல், பொருளாதார நிலைகளில் இலங்கை பௌத்த – முஸ்லிம் மக்களின் உறவு நிலைகள் மற்றும் பௌத்த - முஸ்லிம் இன முரண்பாடுகள் ஏற்படுவதற்கான காரணங்களும் அது தொடர்பான தீர்வுகளையும் கொண்டு காணப்படுகின்றது.

## முடிவு (Conclusion):

முரண்பாடுகள் நிறைந்த சமுதாயத்தில் பௌத்த - முஸ்லிம் உறவுகள் கட்டியெழுப்பப்படுவது காலத்தின் தேவையாக உள்ளது. தற்காலத்தில் சிறு சிறு முரண்பாடுகள் கூட சமூகங்களுக்கிடையே பெரும் முரண்பாடுகளையும் விரிசல்களையும் தோற்றுவிக்கக் கூடிய வகையில் பல அமுக்கக் குழுக்களும் ஊடகங்களும் தொழிற்பட்டு வருவது வெளிப்படையான உண்மை. அந்தவகையில் முரண்பாடுகள் சமூகங்களுக்கிடையே ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளை முன்வைப்பதனூடாக சமூக நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவது மிகவும் அவசியமானதாகக் காணப்படுகின்றது. எனினும், இது பற்றிய ஆய்வுகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. அதனால், இவ்வாறான ஓர் ஆய்வினை செய்வதனூடாக மாத்தளை மாவட்டத்தில் பௌத்த முஸ்லிம் சமூகங்களுக்கிடையே ஆரோக்கியமான ஒரு சூழலை உருவாக்கும் நோக்கிலேயே இவ்வாய்வு இடம் பெறுவதால் இலங்கையில் இன்று நிலவும் சூழலைப் பொறுத்தவரை இவ்வாய்வானது மிகவும் முக்கியத்துவமுடையதாகக் காணப்படுகின்றது.

## உசாத்துணைகள்


1. Salahuddin, S.V. (2008) Islam, Peace and conflict. New Dwlhi: Pentagan press. pp.01 – 244.
2. அப்துல் கறீம், மு. (1996) இஸ்லாமும் சமய நல்லிணக்கமும். திண்டுக்கல்: ஆயிஷா பதிப்பகம், பக். 01 – 210.
3. அப்துல் வதூத், எஸ். எச். (1993) மாத்தளை மாவட்ட முஸ்லிம்கள். ஹாஜி மன்ஸில், பக். 01 – 28.
4. அமீன், ஸீ. எம். ஏ. (2012) ஹிந்து மதம், பௌத்தம் - இஸ்லாம் ஓர் ஒப்பீட்டாய்வு. ரேவ்மா பதிப்பகம், பக். 65 – 140.
5. அனஸ், எம். எஸ். எம்., அமீர்தீன், வீ., வஸீல், ஏ. ஜே. எல். (2003) இலங்கையில் இனக்கலவரங்களும் முஸ்லிம்களும் சிங்கள – முஸ்லிம், தமிழ் - முஸ்லிம் இன வன்முறைகளும் இன உறவுப் பிரச்சினைகளும் 1915 முதல் 2002 வரை ஓர் ஆய்வு. கொழும்பு: இஸ்லாமிக் புக் ஹவுஸ். பக். 01 – 233.
6. ஆதம்பாவா, எஸ். ஏச். (2003) இஸ்லாம் சமாதானமும் மனித நேயமும். சாய்ந்தமருது: கலமுஷ் - ஷரக் வெளியீடு 2. பக். 14 – 21, 96 – 115.
7. இமய வரம்பன். (1988) இன ஒடுக்கலும் வீடுதலைப் போராட்டமும். மதுரை: சவுத் ஏசியன் புக்ஸ், பக். 09 – 149.
8. சண்முகலிங்கம், க. (2011) இலங்கையில் இன வரையியலும் மானிடவியலும். கொழும்பு: குமரன் புத்தக இல்லம், பக். 06 – 70.
9. தம்பிஐயா தேவதாஸ். (2005) சிங்களப் பழமொழிகள். கொழும்பு: வித்தியாதீபம் பதிப்பகம், பக். 01 – 123.
10. நடேசன், ஜி. (2000) இன முரண்பாடுகளின் வரலாறு. மட்டக்களப்பு: அபிராமி விளம்பர நிறுவனம். பக். 01 – 06.
11. நஜிமுத்தீன், ஏ. (1998) கண்டி இராச்சிய முஸ்லிம்களின் வம்சாவளிப் பெயர்கள். (n.p.). பக்.13 – 155.
12. நூறுல் ஹக், எம். எம். எச். (1998) தீவும் தீர்வுகளும். சாய்ந்தமருது: மருதம் கலை இலக்கிய வட்டம். பக். 51 - 71.
13. புவாஜி, ஏ. ஏ. எம். (1993) மாத்தளை மாவட்ட முஸ்லிம்களின் வரலாறும் பாரம்பரியமும். கொழும்பு: முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள், இராஜாங்க அமைச்சர் அலுவலகம். பக். 23 – 284.
14. முகம்மது சமீம், (1997) ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள். குமரன் பப்ளிஷர்ஸ். பக். 55 – 178.
15. முறாசில். (2013). முஸ்லிம்களும் சமகாலப் பிரச்சினைகளும் சில பதிவுகள் - பாகம் 1. மூதூர்: பீஸ் ஹோம். பக். 01 – 130.
16. வல்பொல சிறி இராகுலர். (1989) புத்த பகவான் அருளிய போதனை. மொ.பெ: நவாலியூர் சோ. நடராசன். பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் வெளியீடு, பக். 01 – 368.
17. றவூப் ஸெய்ன். (2006). சிங்கள – முஸ்லிம் இன மோதல்கள் ஒரு சமூக அரசியற் பார்வை. சமூக விஞ்ஞானங்களுக்கான இப்னு கல்தூன் ஆய்வகம். பக். 01 – 65.
18. றசாக் முஹம்மட் அலி. (2005). இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வும் முஸ்லிம்களும். பக். 01 – 03, 25 – 28, 79.
19. ஜோரஜ் ப்ரெக்ஸ், பார்ட் க்ளெம். (2004). பல்வகையினைக் கையாளுதல் இலங்கையில் சமாதானமும் முரண்பாடும் பற்றிய சொல்லாடல். கிளின் ஜென்டால்: நெதர்லாந்து சர்வதேச உறவுகள் நிலையம். பக். 01 – 54.
20. மேற்படி. மன்சூர் மொகமட் பாஸில். இலங்கையில் இனத்துவப் பிணக்கில் முஸ்லிம் காரணி. பக். 195 – 219.
21. ஹாரிஸ், எச். எல். எம். (2013) சகவாழ்வு சாத்தியப்படுவதற்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும். விஸ்டம் பப்லிசர்ஸ். பக். 13 – 20. 70 – 75.

22. ஆதம்பாவா.எம்.எம். (2010.10.25) ***தமிழில் பிறமொழிக் கலப்பின் விளைவு.*** [Online] Available from: http://www.palakani.com/showthread.php?tid=1569, [Accessed 2012.05.20].
23. நசீர்தீன்.எம்.ஆர்.எம். (2007.04.27) ***தமிழ்பேசும் மக்களின் பேச்சுவழக்கில் கலந்துள்ள சிங்களமொழிச் சொற்கள்.*** [Online] Available from: http://www.palakani.com/showthread.php?tid=1569, [Accessed 2012.05.20].